29.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகள் சங்கத்தினர் வெற்றிக் கூட்டம்**

ஜாதி சான்றிதழ்கள் உள்ளிட்ட சான்றிதழ்கள் பழைய முறைப்படி வழங்கப்படும் என்ற ஆட்சியரின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் காஞ்சிபுரத்தில் வெற்றிக் கூட்டம் நடைபெற்றது.

ஜாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்கள் இணையதள சேவை மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 2 மாதங்களாக இந்த இணையதள சேவை மையங்கள் முடங்கிக் கிடக்கின்றன. சர்வர் பழுது, இணையதள சேவை பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால், பொறியியல் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியாமல் தவித்து வந்தனர். இதுகுறித்து தினமணியில் செய்தி வெளியானது. மேலும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.மாவட்டம் முழுவதும் இதே நிலை நீடித்ததால், தாற்காலிகமாக பழைய முறைப்படி சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று ஆட்சியர் வி.கே.சண்முகம் செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கடந்த 2 நாள்களாக பழைய முறைப்படி சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வெற்றிக் கூட்டம் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் அருகே வியாழக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் வட்டச் செயலாளர் இ.லாரன்ஸ் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் சி.பாஸ்கரன், மாவட்டச் செயலாளர் கே.நேரு உள்ளிட்ட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வானிலை ஆய்வுப் பணிகளுக்கு புதிய அதிவேக கணினி**

வானிலையை 10 நாள்களுக்கு முன்கூட்டியே கணிக்கப் பயன்படும் "பாஸ்கரா' என்னும் புதிய அதிவேக கணினியை (சூப்பர் கம்ப்யூட்டர்), மத்திய புவிசார் அறிவியல் துறை அமைச்சர் ஹர்ஷ வர்தன், வரும் 2-ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். உத்தரப் பிரதேச மாநிலம், நொய்டாவில் உள்ள வானிலை முன்னறிவிப்புகளுக்கான தேசிய மையத்தில் (என்.சி.எம்.ஆர்.டபிள்யூ.எஃப்.), உலக அளவிலான வானிலையை கணிக்கும் தொழில்நுட்ப வசதிகள் உள்ளன. இந்த தொழில்நுட்ப வசதிகள் மூலம் கனமழை, புயல் போன்றவற்றை முன்கூட்டியே கணிக்க இயலும். இந்தத் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தும் நோக்கிலும், வானிலையை 10 நாள்களுக்கு முன்பே கணிக்கும் வகையிலும் 'பாஸ்கரா' என்னும் புதிய அதிவேக கணினி, இந்த மையத்தில் தற்போது நிறுவப்பட உள்ளது. அதிவேக செயல்திறன் கொண்ட இந்த கணினியின் மூலம், வானிலை தொடர்பான ஆய்வுப் பணிகள், வானிலை முன்னறிவிப்புகள் போன்றவற்றுக்கான தொழில்நுட்பம் மேம்படும் என்று புவிசார் அறிவியல் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

**111 ஹெக்டேரில் கோகோ சாகுபடி: அதிகாரிகள் ஆய்வு**

முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி வாரியத்தின் (கொச்சி) நிதியுதவியுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் 111 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் ஆய்வு செய்யப்பட்டன. கோகோ செடிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பருப்புகள், சாக்லேட்

தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனால், கோகோ செடிகள் சாகுபடி செய்வதற்கு வசதியாக, பிரபல சாக்லேட் தயாரிப்பு நிறுவனம் சார்பில் தரமான கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில், பழனி, கன்னிவாடி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், திண்டுக்கல், வத்தலகுண்டு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 620 ஹெக்டேரில் கோகோ சாகுபடி நடைபெறுகிறது. தேசிய தோட்டக் கலைத் திட்டத்தின் கீழ், கோகோ சாகுபடி பரப்பளவை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி வாரியத்தின் (கொச்சி) மூலமும் நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2014-15ஆம் நிதியாண்டில், திண்டுக்கல் மாவட்டத்தில் மேலும் 200 ஹெக்டேர் பரப்பளவில் கோகோ சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.ஹெக்டேருக்கு 60 சதவீத மானியம் வழங்குவதற்காக ரூ.24 லட்சம் நிதியுதவியும் அளிக்கப்பட்டது. அதன்படி 111 ஹெக்டேர் பரப்பளவில் கோகோ சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, ரூ.12.94 லட்சம் மானியம் வழங்கப்பட்டது. தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ள கோகோ செடிகளை, கேரள வேளாண்மை பல்கலை.யின் ஆராய்ச்சி மைய இயக்குநர் ஆர்.விக்ரமன் நாயர், முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி வாரிய தொழில்நுட்ப அலுவலர் வி.எம்.நிக்ஹில், தமிழ்நாடு வேளாண் பல்கலை. பேராசிரியர் பரமகுரு, திண்டுக்கல் தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் நா.ராமநாதன் ஆகியோர் புதன்கிழமை பார்வையிட்டனர். இதுகுறித்து துணை இயக்குநர் நா.ராமநாதன் தெரிவித்தது:

நடவு செய்யப்பட்ட 3 ஆண்டுகளில் காய்க்க தொடங்கும் கோகோ செடிகள், 25 ஆண்டுகள் வரை பயனளிக்கும். ஒரு செடியில் 2 கிலோ வீதம் விதைகள் பெற முடியும். அதன்படி, ஹெக்டேருக்கு 1000 கிலோ விதைகள் கிடைக்கும். கிலோ ரூ.160க்கு விற்பனை செய்யப்படுவதால்,

ஹெக்டேருக்கு ரூ.1.60 லட்சம் உபரி வருமானமாக பெற முடியும் என்றார்.

**ஈரோடு மாவட்டத்தில் சூறாவளிக் காற்றுடன் கன மழை**

ஈரோடு மாவட்டத்தில் புதன்கிழமை இரவு திடீரென சூறாவளிக் காற்றுடன் கன மழை பெய்தது. ஈரோடு மாவட்டம், முழுவதும் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டது. இந்நிலையில், புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் திடீரென சூறாவளிக் காற்றுடன் கன மழை பெய்தது. தொடர்ந்து, இடி-மின்னலுடன் மழை பெய்தது. பலத்த காற்றுடன் மழை பெய்ய தொடங்கியதும் ஈரோடு நகரின் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது.

இதில், ஒரு சில பகுதிகளில் நள்ளிரவு 1 மணி வரை மின்சாரம் இல்லை. மேலும், சில பகுதிகளில் வியாழக்கிழமை காலை 9 மணி வரை மின்தடை நீடித்தது. இதனால் புதன்கிழமை இரவு பொதுமக்கள் தூக்கமின்றி கடும் அவதிக்குள்ளாகினர். இருப்பினும், மழை பெய்ததையடுத்து, வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.ஈரோட்டில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்ததால் பல்வேறு பகுதிகளில் சாலையோரத்தில் இருந்த மரங்கள் முறிந்து விழுந்தன. விளம்பரத் தட்டிகளும் காற்றில் பறந்தன. ஈரோடு நகரில் மட்டும் புதன்கிழமை இரவு 47 மி.மீட்டர் மழை பெய்தது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக சிவகிரியில் 50 மி.மீட்டர் மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் கன மழை பெய்தது. இம்மழையால் ஈரோடு மாவட்ட மக்கள் குறிப்பாக விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சிவகிரி, கொடுமுடி, அறச்சலூர், சென்னிமலை, கோபி, மொடக்குறிச்சி, பெருந்துறை உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் புதன்கிழமை இரவு மழை பெய்தது. வெள்ளிக்கிழமை (மே 29) அக்னி

நட்சத்திரம் முடிவடையும் நிலையில் கன மழை பெய்து வெப்பம் குறைந்துள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் புதன்கிழமை இரவு பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): ஈரோடு 47, கொடுமுடி 16.2, கோபி 9.2, புங்கம்பாடி 8.6, பவானிசாகர் 5.6.

**வேளாண் குறைகேட்புக் கூட்டம் ரத்து**

இம்மாதத்துக்கான வேளாண் குறைகேட்புக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாதந்தோறும் வேளாண் குறை கேட்புக் கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை குறித்த தங்களது கோரிக்கைகளை மனுக்கள் மூலமாகவும், நேரடியாகவும் ஆட்சியரிடம் விவசாயிகள் தெரிவித்து வந்தனர். இந்நிலையில், இம்மாதத்துக்கான வேளாண் குறைகேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை (மே 29) நடைபெறுவதாக இருந்தது. நிர்வாகக் காரணங்களால் இக்கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

**பருவமழை: முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள ஆட்சியர் உத்தரவு**

ஈரோடு மாவட்டத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் உத்தரவிட்டுள்ளார். தென்மேற்கு பருவமழையையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் பேசியதாவது: தென்மேற்கு பருவமழையால் ஏற்படும் பேரிடர் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க ஆட்சியர் அலுவலகத்தில் 1077, 0424-2254224 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும், கட்செவி அஞ்சல் மூலமாக 7806917007 என்ற எண்ணிலும்

தெரிவிப்பதற்கு உரிய வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து வட்டாட்சியர்களும் தங்கள் பகுதியின் மழையளவு, சேதாரங்கள் குறித்த அறிக்கையை ஒவ்வொரு நாளும் காலை 7, மாலை 3.50 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும். வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உள்ள மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தேவையான உணவு வசதி செய்யவேண்டும். ஆற்றின் கரையோரங்களில் வசிப்பவர்களைக் கண்காணித்து, வெள்ள பாதிப்பில் இருந்து அவர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறையினர் தென்மேற்கு பருவமழைக் காலங்களில் ஏற்படும் மழை, வெள்ளம், புயல் ஆகிய பேரிடர்களில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கத் தேவையான ரப்பர் படகு உள்ளிட்ட உபகரணங்களை தேவையான அளவு இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். மின்சாரத் துறையினர் தென்மேற்கு பருவக் காற்று மற்றும் மழையால் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டால் அவற்றை உடனடியாக சீரமைக்கத் தேவையான பணியாளர் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். மின் இடையூறுகளை உடனுக்குடன் சீரமைக்கவேண்டும். பொதுப்பணித் துறையினர் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் பாதிப்புக்குள்ளான மக்களை தங்க வைப்பதற்குரிய இடங்களை ஆய்வு செய்து அவற்றில் மின்சாரம், குடிநீர் வசதிகளை உறுதிப்படுத்த வேண்டும்.

நீர்நிலைகளில், தாழ்வான பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆறு, வாய்க்கால் பகுதிகளில் தேவையான அளவு மணல் மூட்டைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறையினர், சாலைகளில் காற்றினால் விழும் மரங்களை உடனுக்குடன் அகற்றத் தேவையான உபகரணங்களை வைத்திருக்க வேண்டும். குடிமைப்பொருள் வழங்கல் துறையினர் தென்மேற்கு பருவமழைக்

காலத்தின்போது ரேஷன் கடைகளில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவை போதுமான அளவு இருப்பில் உள்ளதா என்பதையும் உறுதி செய்யவேண்டும். மேலும், ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகக் குழாய்களில் கசிவுகளின்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக் கொள்ளவேண்டும். மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும். சுகாதாரத் துறையினர், தொற்று நோய்கள் ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து மருந்துகளையும் போதிய அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும். அவசரக்கால ஊர்திகள், மருத்துவ வாகனங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றார். இக்கூட்டத்தில், உதவி ஆணையர் (கலால்) சுரேஷ், நலப்பணிகள் இணை இயக்குநர் டாக்டர் மணி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராமதாஸ், வேளாண் பொறியியல் துறை உதவிப்பொறியாளர் மனோகரன், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் குணசீலன், ஈரோடு மாவட்ட வன அலுவலர் நாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மண் பயன்பாடின்றி புதிய சாகுபடி முறை கல்லூரி மாணவர்கள் முயற்சி**

மண் பயன்படுத்தாமல் புதிய சாகுபடி செய்யும் முயற்சியில் குமாரபாளையம் எக்ஸல் கல்லூரி மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.காளான் சாகுபடி போல எதிர்காலத்தில் பூமியை பயன்படுத்தாமல் இதன் மூலம் விவசாயம் செய்யலாமென அவர்கள்தெரிவித்தனர்.நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் எக்ஸல் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மண்ணைப் பயன்படுத்தாமல், குறைந்த ஈரப்பதத்தில் சாகுபடி செய்யும் உயர் தொழில் நுட்ப முறையை உருவாக்கி உள்ளனர்.

இந்த தொழில்நுட்ப முறை குறித்து எக்ஸல் பொறியியல் முதல்வர் பழனிச்சாமி கூறியது: விவசாய நிலத்தின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக, நீரை சிக்கனமாக பயன்படுத்தி சொட்டு நீர் பாசன அமைப்புக்கு விவசாயம் மாறி வருகிறது. இந்த

சூழ்நிலையில், வேளாண் சாகுபடியில் முன்னேற்ற நிலையை அடைய, புதிய தொழில் நுட்பங்களை கண்டறிய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.மின்னியல், மின்னணு பொறியியல் துறை இறுதியாண்டு மாணவர்கள் குறைந்த மண் வளத்தில் பயிர்கள் வளரும் ஹைட்ரோபோனிக்ஸ் சாகுபடி முறையை உருவாக்கியுள்ளனர். வழக்கமாக பயிர் சாகுபடியில் விளைச்சல் அதிகமாக கிடைக்க நீர்வளம், மண்வளம், தாது சத்துக்கள், காற்று உள்ளிட்டவை பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்கள் வடிவமைத்துள்ள இந்த புதிய முறையில் மண்வளம் இல்லாமல், குறைவான நீர் வளத்தை பயன்படுத்தி, ஊட்டச்சத்து பயிருக்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.

ஹைட்ரோபோனிக்ஸ் முறையின்படி பயிரிடும் சூழலில் தட்ப வெப்ப நிலை, ஈரப் பதம், ஊட்டச் சத்து, குளிரூட்டும் முறை, வெப்பமூட்டும் முறை, வெளிச்சம் ஆகியவற்றை கட்டுப்படுத்த மின்னியல் முறையில் அமைந்த அளவீடுகள் உள்ளன. மேலும், சிறப்பு நுண்ணூட்டச்சத்து முறை பயன்படுத்தப்படுவதால் பயிர்கள் வேகமாக வளரும். இந்த ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் 7 வகைகள் உள்ளன. இதில், சொட்டு நீர் முறையைப் பயன்படுத்துகிறோம். இந்த முறையானது, வேளாண் தொழில் நுட்பத்தில் புதிய வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஹைட்ரோபோனிக்ஸ் முறை மூலம் இந்தியா முழு வளர்ச்சி பெற்ற நாடாக உருவாகும். இந்த திட்டத்தினை சிறிய அளவில் செயல்படுத்தினால் குறைந்தபட்ச முதலீடாக ரூ.50 ஆயிரம் முதல் ரூ.80 ஆயிரம் மட்டுமே தேவைப்படுமென அவர் தெரிவித்தார். இதற்கான ஆய்வுப்பணி கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணு பொறியியல் துறைத் தலைவர் அருள்முருகன் மேற்பார்வையில் மாணவர்கள் சதாசிவம், மணிமுத்து, சதீஷ்குமார், மணிகண்டன் ஆகியோர் செய்துள்ளனர்.

புதிய பயிர் சாகுபடி முறையை வடிவமைத்துள்ள மாணவர்களை எக்ஸல் கல்வி நிறுவனங்களின் தலைவர் நடேசன், துணைத் தலைவர் மதன் கார்த்திக், தொழில்நுட்ப இயக்குநர் செங்கோட்டையன் மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள் பாராட்டினர்

**சந்தையில் மல்லிகைப் பூ விலை உயர்வு**

பரமத்தி வேலூர் பூக்கள் ஏலச் சந்தையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூக்களின் விலை உயர்ந்துள்ளதால் பூக்கள் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அய்யம்பாளையம், கொளக்காட்டுப்புதூர், பரமத்தி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம் சேமங்கி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் குண்டுமல்லி, சாமந்தி, சம்பங்கி, அரளி உள்ளிட்ட பூக்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன. இங்கு விளையும் பூக்களை பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூ ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி ஒரு கிலோ ரூ.600-க்கும், சம்பங்கி ஒரு கிலோ ரூ.250-க்கும், அரளி ஒரு கிலோ ரூ.100-க்கும், கோழிக்கொண்டை ஒரு கிலோ ரூ.30-க்கும் ஏலம் போனது.

**"கிருஷ்ணகிரியில் மா கொள்முதல் நிலையம் அமைக்கப்படும்'**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர் டி.பி. ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஆட்சியர் 25 மனுக்களைப் பெற்றார். இதில், விவசாயிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தினர். தொடர்ந்து, ஆட்சியர் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா கொள்முதல் நிலையம், பயிற்சி மையம், பதப்படுத்துதல், நவீன தொழில்நுட்ப மையம் ஆகியவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ஏரி, குளங்களைத் தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் ஜூன் மாதம் முதல் 36 ஆயிரம் இடத்தில் மண் மாதிரிகள் எடுக்கப்பட உள்ளன. நிகழாண்டு 10 ஆயிரம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு உள்படுத்தப்பட உள்ளன. மண் ஆய்வு விவரங்கள் ஜூலை முதல் வாரத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்கப்பட உள்ளன. முதல் போகத்திற்கு நெல் நடவு எந்திரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மலைக் கிராமங்களான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, தளி, பெட்டமுகிலாளம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. பாலசுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குநர் சபா நடேசன், நேர்முக உதவியாளர் சுமதி உள்ளிட்டோர் கலந்து

கொண்டனர்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதிகபட்சமாக போச்சம்பள்ளியில் 126.6 மி.மீ. மழை பதிவானது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து, கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில், புதன்கிழமை இரவு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சிறிது நேரத்தில் இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழையளவு (மி.மீட்டரில்) போச்சம்பள்ளி 126.6,

பெனுகொண்டாபுரம் 38, பாரூர் 16.8, ஊத்தங்கரை 12, நெடுங்கல் 10, தேன்கனிக்கோட்டை 9, கிருஷ்ணகிரி 5 மழை பதிவாகின. இந்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் இடியுடன் பலத்த மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதன்கிழமை இரவு இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. மாவட்டத்தில் 10 நாள்களாக கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில் புதன்கிழமை இரவு 7 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை வியாழக்கிழமை அதிகாலை வரை தொடர்ந்து பெய்தது. இதனிடையே, காற்றும், பலத்த இடி சப்தம், மின்னலும் இருந்தன. இதனால், மாவட்டத்தில் நிலவிய வெப்பம் தணிந்து குளிர்ந்த நிலை ஏற்பட்டது. மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): பாபநாசம் 71, கல்லணை 45.8, அணைக்கரை 44.2, பூதலூர் 43.2, அய்யம்பேட்டை 36, மஞ்சலாறு 33.2, வல்லம் 30.2, திருக்காட்டுப்பள்ளி 29.4, தஞ்சாவூர் 25, திருவிடைமருதூர் 22, திருவையாறு 20, கும்பகோணம் 19, பட்டுக்கோட்டை 7, வெட்டிக்காடு 6, குருங்குளம் 3, ஒரத்தநாடு 1.9, நெய்வாசல் தென்பாதி 1.6.

மேலும், வியாழக்கிழமை பகலிலும் வானில் மேகமூட்டம் காணப்பட்டதால், வெப்பத்தின் தாக்கம் தெரியவில்லை. மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளை விட நிகழாண்டில் கோடை காலத்தில் கூடுதல் மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் நிகழாண்டில் இதுவரை 200.99 மி.மீ. மழை பெய்துள்ளது. இதே காலகட்டத்தில் 2013 ஆம் ஆண்டில் 92.36 மி.மீ.-ம், 2014-ம் ஆம் ஆண்டில் 138.96 மி.மீ.-ம் மழையளவு பதிவானது.

**ரூ. 2.80 கோடிக்கு சின்ன வெங்காயம் விற்பனை**

செட்டிக்குளம் வணிக வளாகத்தில் ரூ. 2.80 கோடிக்கு சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைத்தீர்க் கூட்டத்திற்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசியது: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளம்

கிராமத்தில் ரூ. 114.90 லட்சம் மதிப்பீட்டில் சின்ன வெங்காயத்துக்கான வணிக வளாகம் மற்றும் இதர காய்கறிகளுக்கான குளிர்பதன சேகரிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 6,190 விவசாயிகள் தங்களது 15,93,364 கிலோ சின்ன வெங்காயத்தை ரூ. 2.80 கோடிக்கு விற்பனை செய்துள்ளனர். இதேபோல, எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் இதுவரை 5,355 குவிண்டால் பருத்தி ரூ. 2.5 கோடிக்கு விற்பனையானது. பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது நெல் 78 ஹெக்டேரிலும், கரும்பு 174 ஹெக்டேரிலும் உள்பட மற்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும்,வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் 119.65 மெ.டன், நிலக்கடலை 30.298 மெ.டன், பயறுவகை விதைகள் 3.421 மெ.டன் அளவில் விதைகள் இருப்பில் உள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் யூரியா 739 மெ.டன், டி.ஏ.பி. 368 மெ.டன் உள்ளிட்ட உரங்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகள் தனியார் உரக்கடைகளில் உரங்கள் வாங்கும்போது ரசீது கொடுக்கப்படாமல், அதிக விலை, உரங்களின் தரக்குறைவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு சம்பந்தப்பட்ட வட்டார உதவி இயக்குநர்களை அணுகி தீர்வு காணலாம்.

நடமாடும் மண் பரிசோதனை மையம்: ஒவ்வொரு கிராமங்களுக்கும் வரும் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் அனைத்து விவசாயிகளும் மண் மாதிரிகளை கொண்டுவந்து ஆய்வு செய்து கொள்ளலாம். வரும் ஜூலை மாதத்தில் பயிர்க்கடன் மேளா நடைபெற உள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் 10 சதவீத விவசாய குடும்பங்களுக்கு பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் சேவை மையம்:**

கொளக்காநத்தம், மருவத்தூர், புதுவேட்டக்குடி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் சேவை மையம் தொடங்கப்பட உள்ளது. இங்கு அதிகளவில் பயிர்சாகுபடி செய்யப்படும் நெல், பருத்தி, மக்காச்சோளம், கரும்பு, மரவள்ளி மற்றும் சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சி தாக்குதல், அதை கட்டுப்படுத்தும் முறைகள், நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றிய விளக்கப்படங்கள் அமைக்கப்பட உள்ளது என்றார் அவர்.

## நீடாமங்கலம் வட்டாரத்தில் சாகுபடி வயல்களில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு

கோடை நெல், குறுவை நாற்றங்கால் வயல்களில் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அதிகாரிகள் புதன்கிழமை நேரில் ஆய்வு செய்தனர்.நீடாமங்கலம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெல், குறுவை நாற்றங்கால் வயல்களில் ஆங்காங்கே சில இடங்களில் குலை நோய் தாக்குதல் அறிகுறிகள் தென்படுகின்றன. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ரெ. பாஸ்கரன், நிலைய உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ. காமராஜ், முனைவர் ராஜாரமேஷ், மருத்துவர் செ. சரவணன், நீடாமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் ஆகியோர் ராயபுரம், காளாச்சேரி, மேலப்பூவனூர் கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள

கோடை நெல் பயிர் மற்றும் குறுவை நெல் நாற்றங்கால் வயல்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது விவசாயிகளிடம், அதிகாரிகள் தெரிவித்தது: வயல்வெளியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்படும் களைகளை அழித்து மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நாற்றுகளை நடவு வயலில் நெருக்கமாக நடக்கூடாது. நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் 200 கிராம் ஏக்கருக்கு அல்லது கார்டிபன்டிடசிம் 200 கிராம் ஏக்கருக்கு என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றனர்.

**"விவசாயிகளைப் பாதிக்கும் நகைக்கடன் திட்டத்தை கைவிட வேண்டும்'**

விவசாயிகளைப் பாதிக்கும் நகைக்கடன் திட்டத்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கைவிட, மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அவ்வமைப்பின் மாநிலத் தலைவர் வை.தினகரன் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஏழை மக்களுக்காக நகைக்கடனுக்கு 7 சதவீத வட்டியில் நகைக்கடன் வழங்கப்பட்டது. அதிகபட்சமாக 2013 மார்ச் வரையில் 3 லட்சம்வரை 7 சதவீத வட்டியில் விவசாயிகள் நகை அடமானக் கடனாகப் பெற்றனர். அதற்குப் பின்னர் ரூ. 1 லட்சம் வரை மட்டுமே 7 சதவீத வட்டியில் விவசாயக் கடன் வழங்கப்படும் என வங்கிகள் அறிவித்தன. 7 சதவீத வட்டியில் வைக்கப்படும் நகைகள் திருப்பும் போது 3 சதவீத வட்டி விவசாயிகளுக்கு மானியமாக கொடுக்கப்பட்டது. தற்போது அந்த வங்கிகள் விவசாயத்துக்காக நகைக் கடன் பெற விவசாய நிலத்துக்கான சிட்டா அடங்கல் இருந்தால் மட்டுமே 7 சதவீத வட்டியில் கடன் வழங்குகிறது. இது விவசாயிகளை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கி

வருகிறது. தமிழகத்தில் 75 சதவீத விவசாயிகள் நிலம் இல்லாமல் தினக்கூலி அடிப்படையில் விவசாய வேலை செய்து வருகின்றனர். அவர்கள் சிட்டா அடங்கல் இல்லாமல் நகைக்கடன் வாங்க சென்றால் 12.25 சதவீத வட்டியிலேயே கடன் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வங்கிகளின் இத்தகைய நடைமுறைகளை ரத்து செய்ய, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயம், கல்விக் கடன்கள் எளிதாகப் பெற ஒத்துழைப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் எளிதான முறையில் விவசாயம் மற்றும் கல்விக் கடன் பெறுவதற்கு வங்கிகள் ஒத்துழைக்க வேண்டும் என ஆட்சியர் மு. கருணாகரன் அறிவுறுத்தியுள்ளார். திருநெல்வேலி மாவட்ட வங்கியாளர்கள் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஆட்சியர் மு. கருணாகரன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் பேசியதாவது: விவசாயிகளின் பாதுகாப்பை உறுதி செய்து விவசாயத்தை மேம்படுத்திடும் வகையில் விவசாயிகளுக்கு தமிழக அரசு பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, அரசின் மானியக் கடனுதவி திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தகுதியான விவசாயிகளை தேர்வு செய்து அவர்கள் எளிதாக கடன் பெறும் வகையில் வங்கியாளர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும். 2015-16 ஆம் கல்வியாண்டில் உயர்கல்வி பயில்வதற்காக கல்விக் கடன் வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்கள் தேவையான ஆவணங்களை அளிக்கும்பட்சத்தில் கல்விக் கடன் வழங்கிட அனைத்து வங்கியாளர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மாவட்டத் தொழில் மையம், தாட்கோ, மகளிர் திட்டம், புதுவாழ்வுத் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தும் பல்வேறு புதிய தொழில் முனைவோருக்கான கடனுதவி வழங்கும் திட்டங்களின் கீழும் தகுதியான பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கி, தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை வங்கிகள் அடைய வேண்டும்

என்றார். கூட்டத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் வி.எஸ். ரகுநாதன், ரிசர்வ் வங்கியின் உதவி பொதுமேலாளர் எஸ். சுந்தரேசன், தேசிய வங்கியின் உதவி பொதுமேலாளர் கே. ராமலிங்கம், முன்னோடி வங்கி மேலாளர் எஸ். அழகர்சாமி, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் சி. கெங்கராஜ், மாவட்டத் தொழில் மைய மேலாளர் மாரியம்மாள், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் வை. ஜெயக்குமார், மக்கள் தொடர்பு அலுவலர் இரா. அண்ணா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், வங்கியாளர்கள் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாவட்டத்தில் பரவலாக மழை சேத்தியாத்தோப்பில் 95.20 மி.மீ., பதிவு**



கடலூர்: கடலூர் மாவட்டத்தில் பரவலாக பெய்த கோடை மழை விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மாவட்டத்திலேயே சேத்தியாத்தோப்பில் அதிகபட்சமாக 95.20 மி.மீ., மழை பதிவானது.கடலூர் மாவட்டத்தில் கத்திரி வெயில் சுட்டெரிந்து வந்தது. நாள்தோறும் 103 டிகிரிக்கு மேல்

வெயில் காய்ந்ததால் அனல் காற்று வீசியது. இரவில் மக்கள் தூங்குவதற்கே அவதிப்பட்டனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 6:00 மணிக்கு இடியுடன் கூடிய மழைபெய்தது. மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று காலை வரை பெய்த மழையளவு மி.மீ., விவரம்: சிதம்பரம் 24, கடலூர், பரங்கிப்பேட்டை 19, காட்டுமன்னார்கோவில் 58, தொழுதூர் 8.30, ஸ்ரீமுஷ்ணம் 32, விருத்தாசலம் 64, பண்ருட்டி 24, கொத்தவாச்சேரி 36, கீழ்ச்செருவாய் 31, வானமாதேவி 54.40, அண்ணாமலை நகர் 24.80, சேத்தியாத்தோப்பு 95.20, புவனகிரி 61, லால்பேட்டை 47, மேமாத்தூர் 30, காட்டுமயிலூர் 17, வேப்பூர் 22, குப்பநத்தம் 71.50, லக்கூர் 9.20, பெலாந்துரை 11 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்திலேயே சேத்தியாத்தோப்பில் 95.20 மி.மீ., மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழை காய்கறி உள்ளிட்ட பயிர்களுக்கு தேவையானதாக இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்றும் வானம் மேக மூட்டத்துடன் இருந்தது.

**கோடை மழையால் தப்பிய யூக்கலிப்டஸ் மரங்கள்**

தியாகதுருகம்: கோடை மழை காரணமாக கள்ளக்குறிச்சி பகுதி வனப்பகுதியில் 1 லட்சம் ஏக்கர் பரப்பில் வளர்க்கப்படும் யூக்கலிப்டஸ் மரங்கள் கருகாமல் தப்பியது. கள்ளக்குறிச்சி சுற்றியுள்ள சின்னசேலம், தியாகதுருகம், சங்கராபுரம், ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள வனப்பகுதியில் வியாபார நோக்கில் யூக்கலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுகிறது. இவை இயற்கையாக பெய்யும் மழையை கொண்டு வளர்ந்து பலன் தருகிறது. தகுந்த பருவத்தில் மரங்கள் அறுவடை செய்யப்பட்டு பேப்பர் உற்பத்திக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் கோடையில் கடும் வறட்சி நிலவியது. இதனால் பல ஆயிரக்கணக்கான யூக்கலிப்டஸ் மரங்கள்

பட்டுபோயின. காய்ந்த மரங்களை சிலர் சட்டவிரோதமாக உடைத்து எடுத்து செல்வதும் அதிகரித்தது. இந்நிலையில் கடந்த ஆண்டும் போதிய அளவு பருவமழை பெய்யாத நிலையில் இவ்வாண்டு வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு எதிர்மாறாக கடந்த ஒரு மாதமாகவே அவ்வப்போது மழை பெய்து வெப்பத்தை தணித்தது.

நீர்நிலைகளுக்கு தண்ணீர் கிடைக்கும் அளவுக்கு கனமழை பெய்ததால் மண்ணின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. வனப்பகுதியில் பெய்த மழைநீர் பல இடங்களில் குட்டையாக தேங்கியுள்ளது. இதனால் வாடிய நிலையில் இருந்த யூக்கலிப்டஸ் மரங்கள் கோடையிலும் செழித்து வளர்ந்து பசுமையாக காணப்படுகிறது.

## தொடர் கோடை மழையால் மகிழ்ச்சி மூங்கில் கூடை உற்பத்தி அதிகரிப்பு

தர்மபுரி: விவசாயத்தை சார்ந்த தர்மபுரி மாவட்டத்தில், பல்வேறு தொழில் நடந்து வருகிறது. மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக போதிய பருவமழை இல்லாததால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், விவசாயத்தை சார்ந்த தொழிலான மூங்கில் கூடை உற்பத்தி தொழிலும் பாதிக்கப்பட்டதால், இத்தொழிலில் ஈடுபட்ட பல தொழிலாளர், மாற்றுத்தொழிலுக்கு சென்றனர். இந்நிலையில், மாவட்டத்தில், சில நாட்களுக்கு முன் பெய்த கோடை மழையின் காரணமாக, விவசாயிகள், பயிர் சாகுபடிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதையடுத்து, விவசாய பணிகளுக்கான, மூங்கில் கூடைகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர், மூங்கில் கூடை உற்பத்தியில், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து, ஏமாக்குட்டியூரை சேர்ந்த மூங்கில் கூடை உற்பத்தியாளர் துரை கூறியதாவது: ஏமாக்குட்டியூரில், சில ஆண்டுகளுக்கு முன், 40க்கும் மேற்பட்டோர் மூங்கில் கூடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால், மாவட்டத்தில் விவசாய தொழில் பாதிக்கப்பட்டதால், தற்போது, 15 பேர் மட்டுமே, இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறோம்.விவசாய தொழிலுக்கு, பிளாஸ்டிக், இரும்பு கூடைகள் வந்தாலும், விவசாயிகள் மத்தியில், தொடர்ந்து, மூங்கில் கூடைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனால், எங்கள் பகுதியை சேர்ந்த விவசாயிகள், மொத்தமாக, கர்நாடகா மாநிலம் பெல்காமில் இருந்து மூங்கில்களை வாங்கி வருகிறோம். இங்கு, எங்களுக்குள் மூங்கில்களை பிரித்து கொண்டு, கூடைகளை உற்பத்தி செய்து, தர்மபுரி, நல்லம்பள்ளி வார சந்தைகளில் விற்பனை செய்து வருகிறோம். ஒரு மூங்கில் கூடை அளவுக்கு தகுந்தவாறு, 60 முதல், 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, அதிகபட்சமாக ஒரு நபர், ஐந்து கூடைகள் பின்ன முடிகிறது. குறைந்த வருவாய் கிடைத்தாலும், சொந்த தொழிலாக உள்ளதால், மகிழ்ச்சியுடன், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி பின்பருவ மா விளைச்சல் அமோகம்**

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில், நேற்று முன்தினம் பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, ஒரு வார காலமாக, பகலில் கடும் வெப்பம் வீசி வந்தது. பகல் நேரங்களில் சாலைகளில் நடமாட முடியாத அளவுக்கு வெப்பக்காற்று வீசியது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், பரவலாக மழை பெய்தது. இதில், போச்சம்பள்ளி பகுதியில், இரவு முழுவதும் கனமழை பெய்தது. பல ஆண்டுக்குப்பின், போச்சம்பள்ளியில் மட்டும், 126.6 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதன் காரணமாக, பல ஆண்டாக வறண்டு கிடந்த போச்சம்பள்ளி ஏரி, உள்பட பல ஏரி, குளங்களில், தண்ணீர் தேங்கி நிற்கிறது. தொடர்ந்து மழை பெய்தால், இப்பகுதியில் உள்ள ஏரி, குளங்களுக்கு மேலும், தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், கனமழையால் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில், மாந்தோப்புகளில் தண்ணீர் தேங்கி இருப்பதால், பின்பருவ ரகங்களான மல்கோவா, பீத்தர், கல் நீலம் போன்ற மாங்காய்கள், நன்றாக பெருக்க மடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

### மாவட்டத்தில் பரவலாக மழை: பாசன விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஈரோடு : கோடையின் இறுதியில் பெய்த திடீர் மழையால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருவதால், பாசன விவசாயிகளுக்கு எதிர்பார்ப்பு உருவாகி உள்ளது. கடந்த, 4ம் தேதி துவங்கிய கத்திரி வெயில், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. துவக்கத்தில் பெய்த தொடர் கனமழையே, இதற்கு காரணம். அதன் பின், கடந்த சில தினங்களாக அக்னி நட்சத்திர வெயில், வாட்டி வதைத்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. சிவகிரியில் அதிகபட்சமாக, 50 மி.மீ., மழையளவு பதிவானது.இதர இடங்களில் பெய்த மழையளவு விவரம் (மி.மீ): ஈரோடு,47, மொடக்குறிச்சி,8, புங்கம்பாடி,8.6, பவானிசாகர்,5.6, ஒரத்துப்பாளையம் அணை,19, கொடிவேரி,12, கோபி,9.2, எலந்தகுட்டை மேடு,14, பெருந்துறை,28, ஓலப்பாளையம்,26, அரச்சலூர்,31, சென்னிமலை,22, முத்தூர்,35, மங்களப்பட்டி,30, கொடுமுடி,16.2, வெள்ளகோவில்,10.4, காங்கேயம்,14.2 மி.மீ., ஆகும்.

கோடையின் இறுதியில் பெய்த திடீர் மழையால், காலநிலையில் சற்றே மாற்றம் ஏற்பட்டது. வெயிலின் தாக்கம் சற்று குறைந்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 62.08 அடியாக, நேற்று காலை இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 618 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் மொத்த கொள்ளளவு, 120 அடி. இதில், 15

அடி சகதியாக கணக்கிடப்படும். 80 அடி வரை நீர்மட்டம் உயரும் பட்சத்தில், மாவட்ட நிர்வாக பரிந்துரையின் பேரில், பாசனத்துக்கு நீர் திறக்க தமிழக அரசு அனுமதிக்கும்.

தென் மேற்கு பருவ மழை துவங்கும் முன்னரே, அணையின் நீர்மட்டம் திருப்திகரமாக உள்ளது. வரும் நாட்களில், நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இதனால், அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து, விரைவில் நீர்மட்டம் அதிகரிக்கும் என்று, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இதன் விளைவாக, வழக்கம் போல் குறித்த காலத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட கூடும், என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

## ரூ.7 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

கோபி : கோபி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 159 தேங்காய் பருப்பு மூட்டைகள், ஏழு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று, கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்று பகுதிகளில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை நேற்றைய ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 82.75 முதல், 85.69 ரூபாய்க்கும், சராசரியாக, 84 ரூபாய்க்கும் விலை போனது. நேற்று நடந்த ஏலத்தில், பல்வேறு பகுதிகளை சேர்ந்த, 33 விவசாயிகள், ஏழு வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம், 159 மூட்டைகள், ஏழு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதாக, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் தெரிவித்தார்.

**கேரள முந்திரி - கோகோ அபிவிருத்திவாரிய அதிகாரிகள் திண்டுக்கல்லில் ஆய்வு**

திண்டுக்கல்: கோகோ பயிர் சாகுபடி முறைகள் குறித்து, கேரள முந்திரி - கோகோ அபிவிருத்தி வாரிய அதிகாரிகள் திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வு செய்தனர். திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை பயிர் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ், 612 எக்டேரில் கோகோ சாகுபடியாகிறது. சீதோஷ்ண நிலை காரணமாக இந்த பரப்பு சற்று குறைந்தாலும், பூலத்தூர், கன்னிவாடி, வத்தலக்குண்டு, பழநி பகுதிகளில் அதிகளவு பயிரிடப்படுகிறது. "கேட்பரீஸ்' நிறுவனம் கன்னிவாடியில் இதகென பண்ணையம் அமைத்து, வீரிய கலப்பின "கோகோ' விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. மலைப் பிரதேசத்தில் காபியில் ஊடுபயிராகவும், வயல்வெளிகளில் தென்னையில் ஊடுபயிராகவும் விளையும், கோகோ பலஆண்டு பயிராகும். ஒரு ஏக்கரில் 200 மரங்கள் நட்டால், மரத்திற்கு 2 கிலோ முதல் 5 கிலோ வரை விதைகள் கிடைக்கும். ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் முதல் ரூ.ஒரு லட்சம் வரை வருமானம் ஈட்டலாம். கோகோ சாகுபடி பரப்பை அதிகரிக்க தோட்டக்லைத்துறை 200 எக்டேர் இலக்கு நிர்ணயித்தது. இதற்காக, கேரள மாநிலம் கொச்சியிலுள்ள "முந்திரி - கோகோ' பயிர் அபிவிருத்தி வாரியத்தால், ரூ.24 லட்சம் வழங்கப்பட்டது. அதில், ரூ.12.9 லட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து 111 எக்டேரில் இலக்கு எட்டப்பட்டுள்ளது. சாகுபடி முறைகள் குறித்து, கேரள முந்திரி-கோகோ அபிவிருத்தி வாரிய இயக்குனர் விக்கிரமநாயர், கேரள வேளாண் பல்கலையின் தொழில்நுட்ப அலுவலர் நிக்கில் கன்னிவாடி, வத்தலக்குண்டில் ஆய்வு செய்தனர். திண்டுக்கல் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராமநாதன் உடனிருந்தார்.

அவர் கூறியதாவது: கோகோ சாகுபடி பப்பை அதிகரிக்க இன்னும் என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளலாம் என ஆய்வு செய்யப்பட்டது.

நம் மாவட்டத்தில், கோகோ பயிரிட தட்ப வெட்ப நிலை ஒத்துவருகிறது. மானியமும் வழங்கப்படுகிறது, இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

**மலிவுவிலை காய்கறி விற்பனைபொதுமக்கள் வலியுறுத்தல்**

தேனி:தேனி மாவட்டத்தில் மலிவு விலை காய்கறி விற்பனை மையங்கள் தொடங்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.தேனி மாவட்டத்தில் கூட்டுறவு பண்டக சாலை, கூட்டுறவு விற்பனை சங்கம், அல்லிநகரம் கூட்டுறவு வங்கி ஆகிய இடங்களிலும் பெரியகுளம், ஆண்டிபட்டி, சின்னமனூர், உத்தமபாளையம், போடி, கம்பம், கூடலூர், ஹைவேவிஸில் உள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் மலிவு விலை காய்கறி விற்பனை சில மாதங்கள் நடந்தது.இங்கு குறைவான விலைக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டதால் பொதுமக்களிடம் வரவேற்பு கிடைத்தது. குறிப்பாக இந்த மலிவுவிலை விற்பனை மையங்களில் உழவர்சந்தையை விட காய்கறி விலை குறைவாக விற்கப்பட்டது. இடையில் நிறுத்தப்பட்ட இத்திட்டத்தை மீண்டும் தொடங்குவது குறித்து அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. இந்நிலையில் தேனி மாவட்டத்தில் பல இடங்களில் மலிவு விலை காய்கறி விற்பனை மையங்கள் தொடங்கப்பட வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி



கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிக பட்சமாக போச்சம் பள்ளியில் 126.6 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

பரவலாக மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு மழை பெய்தது. அதன் பிறகு கடந்த ஒரு வாரமாக வெயில் கொளுத்தியது. சுட்டெரித்த வெயிலால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். பலரும் வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்தனர். குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகள் சாலைகளில் செல்ல மிகவும் கஷ்டப்பட்டார்கள். இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. சிறிது நேரத்தில் இடி, மின்னலு டன் மழை பெய்ய தொடங் கியது. இரவு மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. இதனால்

சாலையோரத்தில் கடை வைத்துள்ள தள்ளுவண்டி கடைக்காரர்கள் பலரும் வியாபாரத்தை தொடர முடியாமல் சென்றனர்.

போச்சம்பள்ளியில் கன மழை

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

போச்சம்பள்ளி -126.6, பெனுகொண்டாபுரம் -38, பாரூர் -16.8, ஊத்தங்கரை -12, நெடுங்கல் -10, தேன்கனிக் கோட்டை -9, கிருஷ்ணகிரி -5, மொத்தம் 217.40 மில்லி மீட்டர் மழை பதிவானது. சராசரியாக மாவட்டம் முழுவதும் 18.12 மில்லி மீட்டால் மழை பதிவானது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது.

**வேப்பூர் ஒன்றியத்தில் கால்நடைகளுக்கு மானிய விலை உலர்தீவன விற்பனை மையம் திறப்பு**



வேப்பூர் ஒன்றியத்தில் அமைக்கப்பட்ட கால்நடைகளுக்கான மானிய விலை உலர்தீவன விற்பனை மையம் திறந்து வைக்கப்பட்டது.

உலர்தீவன மையம் பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் அமைக்கப்பட்ட கால்நடைகளுக்கான மானிய விலை உலர் தீவன விற்பனை மைய

திறப்பு விழா நடந்தது. விழாவில் சிதம்பரம் எம்.பி. சந்திரகாசி கலந்து கொண்டு உலர் தீவன மையத்தை திறந்து வைத்து, விவசாயிகளுக்கு கால்நடை தீவன அட்டையை வழங்கினார். விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் சகுந்தலா கோவிந்தன், வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கிருஷ்ணகுமார், புதுவேட்டக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவரும், ஒன்றிய அ.தி.மு.க. செயலாளருமான கிருஷ்ணசாமி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அப்சல், மோகன், உதவி இயக்குனர் மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கால்நடை தீவன அட்டை

இந்த மையத்தில் 1 கிலோ வைக்கோல் ரூ.2 வீதம் மானிய விலையில் வழங்கவும், ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை 105 கிலோ என தொடர்ச்சியாக 2 மாதங்களுக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த மையத்தில் வைக்கோல் பெற கால்நடை வளர்ப்போர் தங்களது ரேஷன் கார்டு நகல், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்தவர்களுக்கு கால்நடை தீவன அட்டை வழங்கப்படும். இந்த அட்டையை காண்பித்து வேப்பூர் உலர் தீவன கிடங்கில் மானிய விலையில் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கான வைக்கோல் பெற்று கொள்ளலாம். வேப்பூர் கால்நடை மருந்தக வளாகத்தில் உள்ள உலர் தீவன கிடங்கின் மூலம் 33 கிராம ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் பயன்பெற உள்ளன என்று கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அப்சல் தெரிவித்தார்.

**வெட்டப்பட்ட கரும்புக்கு விரைவில் பணப்பட்டுவாடா செய்ய வேண்டும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை**



பெரம்பலூர் சர்க்கரை ஆலையில், வெட்டப்பட்ட கரும்புக்கு விரைவில் பணப்பட்டுவாடா செய்ய வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தரேஸ்அஹமது தலமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது:- செட்டிகுளத்தில் உள்ள சின்ன வெங்காயத்திற்கான வணிக வளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சின்னவெங்காயம் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு இதுவரை 6,190 விவசாயிகள் தங்களது 15,93,364 கிலோ சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்துள்ளனர். இதன்மூலம் ரூ.2.80 கோடிக்கு விற்பனை நடைபெற்றுள்ளது. அதேபோல் எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலமாக இதுவரை 5,355 குவிண்டால் பருத்தியானது ரூ.2.05 கோடிக்கு விற்பனையானது. விவசாயிகள் தனியார் உரக்கடைகளில் உரங்கள் வாங்கும்பொழுது தவறாமல் ரசீது கேட்டுபெற வேண்டும். ரசீது கொடுக்கப்படாமல் அதிக விலைக்கு விற்பனை செய்வது மற்றும் விற்பனை செய்யும் உரங்களின் தரக்குறைவு போன்ற பிரச்சினைகள் இருப்பின் விவசாயிகள்

சம்பந்தப்பட்ட வட்டார உதவி இயக்குநர்களை அணுகி தகவல் தெரிவித்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிர்க்கடன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் பயிர்க்கடன் மேளா நடைபெறவுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களில் உள்ள மொத்த விவசாய குடும்பங்களில் 10 சதவீத விவசாய குடும்பங்களுக்கு பயிர்க்கடன் வழங்கிட இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கொளக்காநத்தம், மருவத்தூர், புதுவேட்டக்குடி ஆகிய பகுதிகளில் பயிர்களில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள், நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றிய விளக்கப்படங்கள் அமைக்கப்பட உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான ஆலோசனைகளை அதன் பொறுப்பாளரிடம் கேட்டு பயனடையலாம்.

இவ்வாறு அவர் பேசினார். தகுந்த விலை கிடைக்க... கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசுகையில், பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் வெட்டப்பட்ட கரும்புக்கு விரைவில் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். மேலும் இணை மின்சாரம் தயாரிக்கும் பணி மற்றும் ஆலை நவீனப்படுத்துதல் பணி விரைவில் முடிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் இடுபொருட்கள் பருவ காலத்திற்கேற்ப உடனடியாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய கடனுக்கான பழைய 7 சதவீத வட்டி விகிதத்தை மாற்றக்கூடாது. பெரம்பலூர் மாவட்டத்தில் தடுப்பணைகள் கட்ட மற்றும் ஏரிகள் தூர்வாரப்பட வேண்டும். விவசாய மின் இணைப்பு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கோரிக்கை வைத்தனர்.இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர்(பொறுப்பு) அய்யாசாமி, வேளாண்மை துணை

இயக்குநரும், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) சேகர், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர்(பொறுப்பு) ராஜேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர்(பொறுப்பு), இந்திரா, கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் முத்துகுமாரசாமி மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**'அக்னி' நட்சத்திரம் இன்று விடை பெறும் நிலையில் வட தமிழகத்தில் இடியுடன் கனமழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்**



சென்னை,

'அக்னி' நட்சத்திரம் இன்றுடன்(வெள்ளிக்கிழமை) விடை பெறும் நிலையில், வெப்பசலனம் காரணமாக வட தமிழகத்தில் இடியுடன் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. வெயிலுக்கு ஓய்வு கொடுக்கும் மழை தமிழகத்தில் கடந்த 4-ந்தேதி தொடங்கிய 'அக்னி' நட்சத்திரம் எனப்படும் கோடை 'கத்திரி' வெயில் காலம் 24 நாட்களுக்கு பிறகு இன்றுடன் விடை பெற இருக்கிறது. 'கத்திரி' வெயில் முடிந்தாலும், அதன் தாக்கம் ஒரு சில வாரங்கள் நீடிக்கும். இந்த நிலையில் வெப்ப சலனம் காரணமாக சென்னை உள்பட தமிழ்நாட்டில் அநேக இடங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

தெரிவித்துள்ளது. எஸ்.ஆர்.ரமணன் பேட்டி இதுதொடர்பாக வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் சென்னையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- வெப்ப சலனம் காரணமாக தமிழ்நாட்டில் அநேக இடங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு(இன்று) மழை பெய்யக்கூடும். வட தமிழகத்தில் இடி-பலத்த காற்றுடன் கனமழையை எதிர்பார்க்கலாம். தென் தமிழகத்திலும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையை பொறுத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும். இவ்வாறு அவர் கூறினார்.
திருச்சி, தஞ்சை, நெல்லை...
சென்னை உள்பட ஒரு சில நகரங்களில் நேற்று வெயில் சுட்டெரித்தாலும், பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. அதன்படி, நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 13 செ.மீட்டரும், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் 11 செ.மீட்டரும், கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பில் 9 செ.மீட்டரும் மழை பெய்துள்ளது.
தஞ்சை மாவட்டம் பாபநாசம், திருப்பூர் ஆகிய இடங்களில் தலா 7 செ.மீட்டரும், கடலூர் மாவட்டம் விருத்தாசலம், கே.எம்.கோவில், திருச்சி மாவட்டம் துவாக்குடி, மேல் அணைக்கட்டு, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, நெல்லை மாவட்டம் ஆய்க்குடி, பெரம்பலூர், வேலூர் மாவட்டம் விரின்ஜிபுரம் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீட்டரும், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை, திருச்சி மாவட்டம் சமயபுரம், வேலூர் மாவட்டம் காவிரிப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் தலா 5

செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது. முசிறி, தொண்டி, அம்பாசமுத்திரம், அரியலூர், திண்டுக்கல், சிதம்பரம், கரூர், பண்ருட்டி, மேலூர், திருச்செங்கோடு, நீலகிரி, மயிலாடுதுறை, பொள்ளாச்சி, ராமநாதபுரம், திருவண்ணாமலை உள்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

**மாவட்டத்தில் பெருவாரியான இடங்களில் இரவு முழுவதும் பலத்த காற்றுடன் மழை கொட்டி தீர்த்தது**



சிவகங்கை மாவட்டத்தில் பெருவாரியான இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சாலையில் மரங்கள் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>கோடை மழை</u>

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் நாளையுடன் முடிவடைகிறது. இந்த ஆண்டு அக்னி நட்சத்திரம் தொடங்கியதில் இருந்து மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் தொடர்ச்சியாக 10 நாட்களுக்கும் மேல் மழை பெய்து வந்தது. இதனால் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் இன்றி காணப்பட்டது. அதன்பின்னர் கடந்த 5 நாட்களாக மாவட்டத்தில் கடுமையான வெயில் மக்களை வாட்டி வதைத்தது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதையே தவிர்த்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு மேல் சிவகங்கை மாவட்டத்தில் பெருவாரியான பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. காற்று பலமாக அடித்ததில் மதுரை–ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் மரங்கள் சாலையில் சாய்ந்து விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

மழை அளவு

நேற்று காலை 8 மணி வரையிலான 24 நேரத்தில் பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

திருப்பத்தூர் 53.3 மில்லி மீட்டர், இளையான்குடி 22 மில்லி மீட்டர், தேவகோட்டை 5.3 மில்லி மீட்டர், சிவகங்கை 12 மில்லி மீட்டர்,

காரைக்குடி மற்றும் மானாமதுரை பகுதிகளில் சிறு தூரலுடன் குறைவான அளவு மழை பெய்தது. இந்த மழையினால் சிவகங்கை, திருப்பத்தூர் பகுதிகளில் நேற்று வெப்பத்தின் அளவு குறைந்த அளவில் காணப்பட்டது. மாவட்டத்தில் அதிக அளவாக திருப்பத்தூரில் 53.3 மில்லி மீட்டரும், குறைவான அளவாக காரைக்குடி, மானாமதுரை பகுதியில் குறைவான அளவிலும் மழை அளவு பதிவானது. இந்த ஆண்டு கோடை மழை ஒரளவு பெய்து உள்ளதால் கண்மாய், ஊரணிகளிலும் தண்ணீர் சேர்ந்து உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கோவில்பட்டி தினசரி மார்க்கெட்டில் ஒரு கிலோ கத்தரிக்காய் விலை ரூ.100; மற்ற காய்கறிகள் விலையும் உயர்வு**



கோவில்பட்டி தினசரி மார்க்கெட்டில் நேற்று காய்கறிகள் விலை திடீரென உயர்ந்தது. ஒரு கத்தரிக்காய் ரூ.100 வரை விற்பனையானது.

ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.100

கோவில்பட்டி சுற்று வட்டாரத்தில் பல்வேறு கிராமங்களில் கோவில் கொடை விழா நடைபெற்று வருகிறது. அதனாலும், இன்று (வெள்ளிக்கிழமை) முகூர்த்த நாள் என்பதாலும், கோவில்பட்டி தினசரி மார்க்கெட்டில் அனைத்து காய்கறிகளின் விலையும் நேற்று திடீரென உயர்ந்தது.

நேற்று முன்தினம் மொத்த விலையில் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.40 முதல் ரூ.45 வரை விற்றது. ஆனால் நேற்று காலையில் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.100 வரை விற்பனையானது. பின்னர் மதியம் ரூ.60 ஆக விலை குறைந்து விற்பனை ஆனது.

மற்ற காய்கறிகள்

அதேபோன்று நேற்று முன்தினம் ரூ.35–க்கு விற்ற ஒரு கிலோ கேரட் நேற்று ரூ.40–க்கு விற்பனையானது.

ரூ.40 முதல் ரூ.50–க்கு விற்ற ஒரு கிலோ காலி பிளவர் நேற்று ரூ.50 முதல் ரூ.70–க்கு விற்றது. ரூ.20–க்கு விற்ற ஒரு கிலோ முட்டைகோஸ் நேற்று ரூ.23–க்கு விற்பனையானது. மேலும் சில காய்கறிகளின் விலையும் உயர்ந்து இருந்தது.

தினகரன்

**திருவில்லிபுத்தூர் பகுதியில் மாம்பழ சீசன் துவங்கியது வட மாநிலங்களுக்கு அனுப்பும் பணி தீவிரம்**

திருவில்லிபுத்தூர், : திருவில்லிபுத்தூர் அருகே உள்ள செண்பகத்தோப்பு மாமரம் வளர்ப்புக்கு ஏற்ற பகுதி. இதனால், இப்பகுதியில் ஏராளமான விவாயிகள் மா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் விளையும் மாம்பழத்திற்கு தனி ருசி உண்டு. தற்போது மா சீசன் துவங்கியுள்ளதால்

நன்கு விளைந்த மாம்பழங்களை பறிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பறிக்கப்படும் மாம்பழங்கள் தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் மூலம் சுத்தப்படுத்தப்படுகிறது. இதில் அதிகளவு சப்பட்டை, பஞ்சவர்ணம், ரசகுல்லா, கிளி மூக்கு மாம்பழம் மற்றும் ஊறுகாய்க்கு பயன்படுத்தப்படும் கொட்டை மாங்காய் போன்றவை அதிகளவில் பறிக்கப்படுகிறது. இந்த மாங்காய்கள் மற்றும் பழங்கள் தமிழகம் முழுவதும் மட்டுமின்றி வட மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாம்பழங்கள் தனி பிளாஸ்டிக் ட்ரேக்களில் அடைத்து சரக்கு வாகனங்களில் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.